வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 27.04.2026 திங்கட்கிழமை இதழ் : 111 பக்கங்கள் : 08

## நாட்டை வளர்ச்சி பாதைக்கு கொண்டு செல்ல இந்தியாவுடன் நெருக்கமான உறவு அவசியம்!

### இராஜதந்திரி மிலிந்த மொரகொட சுட்டிக்காட்டு



கொழும்பு, ஏப். 27

இலங்கை தற்போது ஒரு பாரிய பொருளாதார நெருக்கடியையும், எரிசக்தி பாதுகாப்பின்மையையும் சந்தித்து வரும் நிலையில் நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்ல இந்தியாவுடனான உறவை எவ்வாறு கையாள்வது என்பது குறித்த அவதானம் செலுத்தப்பட வேண்டும் என முன்னாள் அமைச்சரும் இராஜதந்திரியுமான மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய ஆய்வு அறிக்கை ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில்- இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு நெதர்லாந்து ஐரோப்பாவின் தளவாட மையமாக மாறியது.

சிங்கப்பூர் தென்கிழக்கு ஆசியாவின் நுழைவாயிலாக வளர்ந்தது. ஆனால் இலங்கை அத்தகைய வாய்ப்புகளை இதுவரை பயன்படுத்தத் தவறிவிட்டுள்ளது. உள்நாட்டு அரசியல் மற்றும் வெளிநாட்டு

07

# ரஷ்யாவிடமிருந்து இலங்கைக்கு குறைந்த விலையில் எரிபொருள்!

### அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 27

அமெரிக்க திறைசேரி திணைக்களம் ரஷ்யாவுடனான எரிபொருள் கொடுக்கல் வாங்கல்களுக்காக வழங்கியுள்ள விசேட சலுகைக் காலத்தைப் பயன்படுத்தி, எரிபொருள்களைக் கொள்வனவு செய்ய இலங்கை திட்டமிட்டுள்ளது.

அமெரிக்க - ஈரான் மோதல்களுக்கு மத்தியில் உலகளாவிய எரிசக்தி விலை களை நிலைப்படுத்துவதற்காக, ரஷ்யாவிடமிருந்து எரிபொருள் கொள்வனவு செய்ய விதிக்கப்பட்டிருந்த தடையை 2026 மே 16 வரை அமெரிக்க திறைசேரி நீடித்துள்ளது.

இந்தநிலையில், தற்போதைய உலக சந்தை விலையை விட மிகக் குறைந்த விலையில் ரஷ்யாவிடமிருந்து மசகு எண்ணெய், நிலக்கரி மற்றும் உரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என வெளிநாட்டு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதன்படி, சலுகைக் காலம் முடிவதற்குள் கொள்வனவு கட்டளைகளை வழங்குமாறு ரஷ்யாவிலுள்ள இலங்கைத் தூதரகத்துக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன், இரு நாடுகளுக்கும் இடையிலான

07

## 50 ஆயிரம் ரூபாவுக்கு குழந்தையை விற்ற சிறிய தாயாரும் , சிறிய தந்தையும் கைது!

### கிளிநொச்சியில் அதிர்ச்சிச் சம்பவம்



கிளிநொச்சி, ஏப். 27

கிளிநொச்சியில் 50 ஆயிரம் ரூபாய்க்கு பெண் குழந்தையை விற்பனை செய்த குழந்தையின் சிறிய தாய் மற்றும் சிறிய தந்தை ஆகியோரும் , குழந்தையை வாங்கிய பெண்ணொருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தர்மபுரம் பகுதியை சேர்ந்த 28 வயதுடைய பெண் தனது கணவருடன் இணைந்து, தமது

07

## வெள்ளை மாளிகை ஊடகவியலாளர் விருந்தில் திடீரென துப்பாக்கிச் சூடு!

### ட்ரம்ப் தம்பதியினர் அவசரமாக வெளியேற்றம்



வாஷிங்டன், ஏப். 27

வாஷிங்டன் ஹில்டன் விருந்தகத்தில் நேற்று முன் தினம் இரவு நடைபெற்ற வெள்ளை மாளிகை செய்தியாளர்கள் சந்திப்பு விருந்து நிகழ்ச்சியில் துப்பாக்கிச் சூடு தொடர்பாக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

முன்னதாக, நிகழ்ச்சி நடைபெற்றுக்

07

## மின் கட்டணம் உயர்ந்தாலும் 38.7 பில்லியன் ரூபா நட்டம்!

### மத்திய வங்கி அறிக்கை

கொழும்பு, ஏப். 27

மின்சாரக் கட்டணங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், கடந்த 2025ஆம் ஆண்டில் இலங்கை மின்சார சபை 38.7 பில்லியன் ரூபாய் நட்டத்தைப் பதிவு செய்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மத்திய வங்கி வெளியிட்டுள்ள 2025ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொருளாதார ஆய்வு அறிக்கையிலேயே இந்த விவரங்கள்

07

## தையிட்டி காணிகளின் அளவீடு இன்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஏப். 27

தையிட்டி விகாரையைச் சூழவுள்ள தனியாருக்குச் சொந்தமான காணிகளை விடுவிப்பதற்கான நில அளவீட்டுப் பணிகள் இன்று மற்றும் நாளை ஆகிய இரு தினங்களிலும் முன்னெடுக்கப்படவுள்ளன என்று தெல்லிப்பழை பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

தையிட்டிக் கிராமத்தில் பொதுமக்களுக்குச் சொந்தமான காணியை ஆக்கிரமித்து விகாரை அமைக்கப்பட்டுள்ளது எனக் கூறி, அந்த நிலத்தை மீள ஒப்படைக்குமாறு கோரி நில உரிமையாளர்கள்

07

## திறைசேரியின் செயலாளர் பதவியை துறக்கவேண்டும்

### சஜித் பிரேமதாஸ வலியுறுத்து

கொழும்பு, ஏப். 27

2.5 மில்லியன் மோசடி தொடர்பில் திறைசேரி செயலாளர் இராஜினாமா செய்து வெளிப்படைத்தன்மையான விசாரணை நடத்த வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இளம் தொழில் வல்லுநர்கள் தரப்புடனும் இடம்பெற்ற கலந்துரையாடலின்

07

## இரு அமைச்சர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

### எதிர்க்கட்சிகள் திட்டம்

கொழும்பு, ஏப். 27

அரசாங்கத்தின் இரு முக்கிய அமைச்சர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வருவதற்கு எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன. இதன்படி, நிதி அமைச்சராகப் பணியாற்றி வரும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் அருண ஜயசேகர ஆகிய இருவருமே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு முகங்கொடுக்கவுள்ளனர். அடுத்த பாராளுமன்ற

07

## 2025 இல் வாகன இறக்குமதி உயர்வு

கொழும்பு, ஏப். 27

இலங்கையில் நீண்ட காலமாக நடைமுறையிலிருந்த வாகன இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதைத் தொடர்ந்து, கடந்த 2025-ஆம் ஆண்டில் நாட்டின் வாகன இறக்குமதி செலவினம் வரலாற்றில் மூன்றாவது மிக உயர்ந்த மட்டத்தை எட்டியுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த பொருளாதார மீளாய்வு அறிக்கை தெரிவித்துள்ளது.

கடந்த 2025-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தனியார் வாகன இறக்குமதிக்கான அனைத்துக் கட்டுப்பாடுகளையும் அரசாங்கம் நீக்கியது. பல ஆண்டுகளாக நிலவிய தடையின் காரணமாக

07

## வீதி விபத்துக்களால் வருடாந்தம் 2,700 இற்கும் மேற்பட்டோர் பலி!

கொழும்பு, ஏப். 27

இலங்கையில் வீதி விபத்துக்கள் காரணமாக வருடாந்தம் 2,700க்கும் அதிகமானோர் உயிரிழப்பதாக போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க கவலை வெளியிட்டுள்ளார்.

தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பணிமனை ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தேசிய போக்குவரத்து பாதுகாப்புத்

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# போர் நடைபெறும் இடங்களுக்கே சமாதான நடைபயணம் வேண்டும்


## ஞானசார தேரர் கூறுகிறார்

கொழும்பு, ஏப். 28

சமாதான நடைபயணம் நடத்துகின்றீர்கள் என்றால், அது போர் நடக்கும் இடங்களுக்குச் சென்று செய்யப்பட வேண்டிய ஒன்று. இலங்கையில் இந்தப் பேரணியை ஒருங்கிணைத்தவர்கள், அரசு அதிகாரிகள் மற்றும் இதில் பங்கேற்ற பிக்குகள் என அனைவரும் முதலில் இந்தச் செய்தியைப் புரிந்துகொள்ள வேண்டும். உலக அமைதி பற்றிப் பேசுவதற்கு இது இடமல்ல. என பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

சமாதான நடைப்பயணம் குறித்து. பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் வெளியிட்டுள்ள காணொளி மூலம் இவ்வாறு கருத்து தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- வியட்நாமைச் சேர்ந்த பன்னாகார தேரர் அவர்கள் அமெரிக்காவில் ஒரு சமாதான பயணத்தை மேற்கொண்டார். அந்தப் பயணம் குறித்து, குறிப்பாக ஒரு பௌத்த நாடு என்ற ரீதியில் நமது பௌத்த சமூகம் அதனை மிகுந்த அன்புடன் ஏற்றுக்கொண்டது. அது பற்றிப் பெரிய அளவில் பேசப்பட்டது. உண்மையில், சமாதான நடைபயணம் குறித்துப் பேச வேண்டுமென்றால் அல்லது உலக அமைதிக்கான பயணத்தை மேற்கொள்ள வேண்டுமென்றால், போர் நடக்கும் இடங்களுக்கே செல்ல வேண்டும். ஏனெனில், இருள் இருக்கும் இடத்திற்குத்தான் வெளிச்சம்



தேவை. ஈரானிய தூதரகத்திற்கோ அல்லது அமெரிக்கத் தூதரகத்திற்கோ சென்று உலக அமைதிக்காகப் பிரார்த்தனை செய்வது ஒரு விடயம். ஆனால், சமாதான நடைபயணம் நடத்துகின்றீர்கள் என்றால், அது போர் நடக்கும் இடங்களுக்குச் சென்று செய்யப்பட வேண்டிய ஒன்று. இலங்கையில் இந்தப் பேரணியை ஒருங்கிணைத்தவர்கள், அரசு அதிகாரிகள் மற்றும் இதில் பங்கேற்ற பிக்குகள் என அனைவரும் முதலில் இந்தச் செய்தியைப் புரிந்து கொள்ள வேண்டும். உலக அமைதி பற்றிப் பேசுவதற்கு இது இடமல்ல.

# "ஆசிரியர் வழிகாட்டி நூல்கள் இதுவரை வழங்கப்படவில்லை"

கொழும்பு, ஏப். 27

நாட்டின் பாரிய அளவிலான ஊழல்கள் மற்றும் மோசடிகள் குறித்த செய்திகளுக்கு மத்தி யில், கல்வி மறுசீரமைப்பு தொடர்பான விடயங்கள் முழு மையாக புறக்கணிக்கப்பட்டுள் ளன என்று சர்வஜன அதிகார கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர விசனம் வெளியிட்டுள்ளார்.

சர்வஜன அதிகாரம் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், "தற்போது நாட்டில் பாரிய அளவிலான ஊழல்கள் மற்றும் மோசடிகள் நாளாந்தம் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறானதொரு சூழலில் கல்வி மறுசீரமைப்பு என்பது அனைவ ராலும் மறக்கடிக்கப் பட்டுள்ளது.

இந்த தவணையில் முதலாம் தர மாணவர்களுக்கு கற்பிப்பதற்கான ஆசிரியர் வழிகாட்டி நூல்கள் அல்லது குறைந்தபட்சம் அவற்றின் கையடக்க ஆவண வடிமைப்பு கூட இதுவரை ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வில்லை.

பாடசாலை தவணை ஆரம்பிக்கப்பட்டு சுமார் ஐந்து நாட்கள் கடந்துள்ள போதிலும், மாணவர்களுக்கு எதனை கற்பிப்பது என்பது குறித்து ஆசிரியர்களுக்கு முறையான தெளிவோ அல்லது பயிற்சிகளோ வழங்கப்படவில்லை"- என்றார். (எ)

# சர்வதேச முதலீட்டாளர்களுக்கு மத்தள விமான நிலையம் திறப்பு

கொழும்பு, ஏப். 27

மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் விமான போக்குவரத்து சார்ந்த முதலீட்டு வாய்ப்புகளை மேற்கொள்வ தற்காக, சர்வதேச முதலீட்டாளர்களுக்கு துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சு அழைப்பு விடுத்துள்ளது.

இதற்கான விருப்பங்களை வெளிப்படுத்தும் ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு உலகளாவிய ரீதியில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ)

# இன்று ஆட்சியிலிருப்பது கொள்ளையர்களின் அரசு

## நாமல் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 27

இன்று ஆட்சியில் இருப்பது கொள்ளையர்களின் அரசாங்கம் என்று பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இதனை தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

அரசாங்கம் பட்டப்பகலில் திறைசேரியை கொள்ளையடித்துள்ளது. பிக்பொக்கட் அடிப்பவர் திருடன் என்று கூறிக்கொண்டு சுற்றித் திரிகின்றான். அந்த திருடர்கள் சொல்வதைக் கேட்டு அப்பாவி மக்கள் அவனைத் துரத்திச் செல்கின்றனர்.

அந்த திருடன் பணத்தை எடுத்துக்கொண்டு அங்கிருந்து நகர்ந்துவிடுகிறான். அரசாங்கமும் அப்படித்தான். அரசு பதவியேற்ற நாள் முதல், ஒருபுறம் முந்நூற்று இருபத்து மூன்று கொள்கலன்கள் கள்ளத்தனமாகக் கடத்தப்பட்டுள்ளன.

துறைமுகத்திலிருந்து போதைப்பொருள் கொள்கலன்கள் கடத்தப்பட்டுள்ளன. மறுபுறம், நிலக்கரி மோசடி செய்யப்படுகின்றது. இப்போது நிதி அமைச்சின் கணக்கிலிருந்தும் பணம் திருடப்பட்டுள்ளது-என்றார்.

(அ)

# கிளிநொச்சி பொலிஸ் நிலைய ஏற்பாட்டில் புத்தாண்டு நிகழ்வு

கிளிநொச்சி, ஏப். 27

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் சித்திரை புத்தாண்டு நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி முகமட் சுல்தான் நஜீம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிளிநொச்சி முல்லைத்தீவு பிரதிப் பொலிஸ்மா அதிபர் எஸ்.மெண்டிஸ் கலந்து கொண்டார்.

குறித்த நிகழ்வில் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர், உதவிப்பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிசார் கலந்து கொண்டனர்.

இதன் போது முட்டை பிடித்தல், கிறீஸ் மரம் ஏறுதல், முட்டை உடைத்தல் போன்ற பாரம்பரிய விளையாட்டுக்கள் பொலிசாருக்கிடையில் இடம்பெற்றன. (அ)

# திருத்தியமைக்கப்பட்ட சுற்றுச் சூழல் சட்டம்!

கொழும்பு, ஏப். 27

இலங்கையின் சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில், 25 ஆண்டுகளுக்குப் பிறகு திருத்தப்பட்ட புதிய தேசிய சுற்றுச்சூழல் சட்டம் அடுத்த சில வாரங்களில் வர்த்தமானியில்வெளியிடப்படவுள்ளது.

தற்போதைய காலத்திற்கு ஏற்ப நவீனமயப்படுத்தப்பட்டுள்ள இந்த புதிய சட்டமூலம் குறித்து சுற்றுச்சூழல் அமைச்சர் கலாநிதி தம்மிக்க பட்டபெந்தி விவரங்களை வெளியிட்டுள்ளார்.

இந்த புதிய சட்டத்தின் கீழ், சுற்றுச்சூழல் விதிமுறைகளை மீறுபவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் வெறும் பரிந்துரைகளை மட்டுமே வழங்க முடிந்த நிலையில், இனி அமுலாக்கல் அதிகாரமும் அதிகாரசபைக்குக் கிடைக்கும்.

குறிப்பாக, பிளாஸ்டிக் போன்ற பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள், அந்தப் பொருட்களின் முழுமையான சுழற்சி முறைக்கு பொறுப்புக்கூற வேண்டிய "உற்பத்தியாளர் பொறுப்பு" எனும் முறைமை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

அதேவேளை, அரசாங்கத்தின் கொள்கைத் திட்டங்களுக்கு "மூலோபாய சுற்றுச்சூழல் மதிப்பீடு" (அ)


# தமிழ் எழுத்தாளர்களின் நூல்களுக்கு தடை கிளிநொச்சியில் கவனயீர்ப்பு போராட்டம்

கிளிநொச்சி, ஏப். 27

கிளிநொச்சியில் உள்ள கந்தசுவாமி ஆலயம் முன்பாக ஈழத்து எழுத்தாளர் தீபச்செல்வன் உட்பட தமிழ் எழுத்தாளர்களின் நூல்கள் தொடர்ந்து தடுத்து வைக்கப்படுவதை கண்டித்து நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெற்றுள்ளது.

இலங்கை அரசின் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்த போராட்டக்காரர்கள், கருத்துச் சுதந்திரத்தை உறுதி செய்ய வேண்டுமென வலியுறுத்தியுள்ளனர்.

நூல்கள் மீதான தடை நீக்கப்பட்டு, எழுத்தாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்றும் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.



(அ)

# எரிபொருளை தடையின்றி வழங்குவதற்கு அரசு ஏற்பாடு

கொழும்பு, ஏப். 27

இலங்கைக்குத் தேவையான மசகு எண்ணெய் மற்றும் எரிபொருளைத் தடையின்றி வழங்குவதற்காக, அடுத்தடுத்து எரிபொருள் கப்பல்கள் நாட்டை வந்தடையவுள்ளதாக இலங்கை கனிப்பொருள் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. இதற்கமைய, 95,000 மெற்றிக் தொன் மசகு எண்ணெயைத் தாங்கிய கப்பலொன்று நேற்று நாட்டை வந்தடைந்தது.

தொடர்ச்சியாக, இன்று 9,500 மெற்றிக் தொன் எரிபொருளைத் தாங்கிய கப்பலும், எதிர்வரும் 28ஆம் திகதி 36,000 மெற்றிக் தொன் எரிபொருளைத் தாங்கிய கப்பலும் இலங்கைக்கு வரவுள்ளதாக கனிப்பொருள் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் மயூர நெத்திகுமாரகே தெரிவித்துள்ளார்.

இந்த புதிய கப்பல்களின் வருகையைத் தொடர்ந்து, எதிர்வரும் ஜூன் மாதம் இறுதி வரை நாட்டுக்குத் தேவையான எரிபொருளை எவ்வித தடையுமின்றி வழங்க முடியும் என அவர் பொதுமக்களுக்கு உறுதி அளித்துள்ளார். இதன் மூலம் எரிபொருள் கையிருப்பு தொடர்பான அச்சம் நீங்கியுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
27.04.2026 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 14

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## மாகாணசபைகளும் இல்லாதவர்களாக தமிழர்கள் விடப்படும் ஆபத்து?

இனப்பிரச்னைக்கு தீர்வாக எதிர்கால அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டிய ஏற்பாடுகளைக் கொண்ட ஆவணத்தை தயாரிப்பதற்கு தமிழர் தரப்பில் முயற்சிகள் முன்னெடுக்கப்படும் வேளையில், மாகாணசபை தேர்தல்களை விரைவாக நடத்துமாறு ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்து வருவது குறித்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்கு கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஊடகங்கள் மூலமாகப் பதிலளித்திருக்கிறார்.

புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறையை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னெடுக்கும் பட்சத்தில், தமிழ் மக்கள் சார்பில் "ஒன்றிணைந்த நிலைப்பாட்டை" முன்வைப்பதற்கென்று கூறிக்கொண்டு" இரு வெவ்வேறு முயற்சிகள்" முன்னெடுக்கப்படுகின்றன. தமிழ் சட்டத்தரணிகள் பேரவை மற்றும் ஈழத்தமிழர் அரசியலமைப்பு நிர்ணய பொதுச்சபை ஆகியவற்றின் முயற்சிகளே அவை.

தமிழ் சட்டத்தரணிகள் பேரவையின் முயற்சிகளில் தமிழ் தேசியப் பேரவையின் சார்பில் பங்கேற்ற பொன்னம்பலம் சில நாள்களுக்கு பிறகு அதே பேரவையின் சார்பில் ஈழத்தமிழர் அரசியலமைப்பு நிர்ணய பொதுச்சபையின் முயற்சிகளுடனும் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார். அது குறித்த விமர்சனங்களும் முன்வைக்கப்படுகின்றன.

அரசியல் தீர்வு யோசனைகளை தயாரிக்கும் முயற்சிகளுக்கு மத்தியில், மாகாணசபை தேர்தல்களை விரைவாக நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்துவதில் என்ன தவறு இருக்கிறது என்பது பிரேமச்சந்திரனின் கேள்வி.

ஒற்றையாட்சிக்குள் மாகாண சபைகளுக்கு உருப்படியான அதிகாரப் பரவலாக்கத்தை ஒருபோதும் செய்ய முடியாது என்ற உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டவர் என்றபோதிலும், பொன்னம்பலம் இறுதியாக இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கருடன் தமிழ்க் கட்சிகள் கொழும்பில் நடத்திய சந்திப்பில் மாகாணசபை தேர்தல்களை நடத்த வேண்டியது அவசியம் என்று மற்றைய தமிழ் கட்சிகளின் தலைவர்களுடன் சேர்ந்து வலியுறுத்தியதாக செய்தி வெளியானது.

ஒற்றையாட்சிக்குள் உருப்படியான அதிகாரப் பரவலாக்கலைச் செய்ய முடியாது என்பது உண்மையாக இருந்தாலும், அதே ஒற்றையாட்சி முறைக்குள் 39 வருடங்களாக நடைமுறையில் இருந்து வரும் மாகாண சபைகளை பயன்படுத்துவதில் என்ன தவறு இருக்கிறது? ஏற்கெனவே தமிழ் அரசியல் கட்சிகள் மாகாண தேர்தல்களில் போட்டியிடவில்லையா? பதவிகளை வகிக்கவில்லையா?

ஒற்றையாட்சி முறையை மாற்றி கூட்டாட்சி (சமஷ்டி ) முறையின் அடிப்படையில் அரசியலமைப்பு ஒன்று அவசியம் என்ற தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாட்டில் இருக்கும் நியாயத்தைப் புரிந்து கொண்டு விட்டுக் கொடுப்பைச் செய்யக்கூடிய மனநிலையில் அரசாங்கமும்ம் தென்னிலங்கை அரசியல் சமுதாயமும் இன்று இருக்கிறதா? அல்லது கூட்டாட்சி அரசியலமைப்பைக் கொண்டு வருவதற்கு அரசாங்கத்துக்கு பாரதூரமான நெருக்குதலைக் கொடுக்கக்கூடிய அரசியல் வல்லமையும் துணிவாற்றலும் தமிழ் அரசியல் சமுதாயத்திடம் இருக்கிறதா?

நடைமுறை யதார்த்தத்தை விளக்காமல் அல்லது விளங்கினாலும் விளங்காத மாதிரி தற்போது நடைமுறையில் உள்ள மாகாண சபை முறையை உதாசீனம் செய்வது இன்றைய விவகேமானதல்ல.

புதிய அரசியலமைப்பை வரைவதற்கான செயன்முறையை அரசாங்கம் அதன் தற்போதைய பதவிக் காலத்தில் தொடங்கும் சாத்தியம் குறித்து கடுமையான சந்தேகம் நிலவுகிறது.

ஒன்றிணைந்து இல்லாவிட்டாலும் தமிழ் சட்டத்தரணிகள் பேரவையும் ஈழத்தமிழர் அரசியலமைப்பு நிர்ணய பொதுச்சபையும் தனித் தனியாகவேனும் தீர்வு யோசனை ஆவணங்களை தயாரித்தாலும் கூட, அரசியலமைப்பு வரைவுச் செயன்முறை ஒன்று முன்னெடுக்கப்படாத பட்சத்தில் அவற்றை வைத்துக்கொண்டு என்ன செய்வது?

அதனால், தற்போது பெருவாரியான குறைபாடுகளுடன் என்றாலும், கைவசமிருக்கும் மாகாண சபைகளை பயன்படுத்துவது எந்த விதத்திலும் தவறாகாது. தமிழ் அரசியல் சமுதாயம் தொலை நோக்குடனும் அரசியல் விவேகத்துடனும் நடந்து கொள்ளாவிட்டால் மாகாணசபைகளும் கைநழுவும் ஆபத்து இருக்கிறது.

## அரசுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை திசை திருப்பவே வாக்குமூலம் பதிவு

### ஐ.தே.க. தவிசாளர் வஜிர விசனம்

கொழும்பு, ஏப். 27

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சத்திர சிகிச்சைக்கு பின்னர் ஓய்வெடுத்துவரும் நிலையில் அவரது மனைவியிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ள குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அவர்களது வீட்டுக்குச் சென்ற நடவடிக்கையை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம். அத்துடன் இது அரசாங்கத்துக்கு எதிராக நாளுக்கு நாள் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை திசைதிருப்புவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கையா என்ற சந்தேகம் எமக்கு எழுகிறது என்று ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

குற்றப்புலனாய்வு அதிகாரிகள் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டுக்கு சென்று அவரது மனைவியிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ள சென்றமை குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

## பாராளுமன்ற குழு முன்னிலையில் திறைசேரி செயலர் வரவேண்டும்

### நிஸாம் காரியப்பர் வலியுறுத்து

கொழும்பு, ஏப். 27

திறைசேரியிலிருந்து 2. 5 மில்லியன் டொலர் சைபர் கொள்ளை மூலம் திருடப்பட்டமை தொடர்பில் எதிர்வரும் மே 6 ஆம் திகதி நடைபெறவுள்ள டிஜிற்றல் பொருளாதாரம் குறித்த துறைசார் மேற்பார்வைக் குழு கூட்டத்துக்கு திறைசேரி செயலாளரை அழைக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் நிஸாம் காரியப்பர் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் பக்கத்தில் விடுத்துள்ள பதிவில், நாட்டின் நிதி கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள இந்த பாரிய பாதுகாப்பு குறைபாடு கவலையளிக்கிறது. இந்தச் சம்பவம் ஒரு வெளிவாரியான சைபர் தாக்குதலா அல்லது அதிகாரிகளின் உடந்தையா என்பது கண்டறியப்பட வேண்டும்.

டிஜிற்றல் பொருளாதாரத்தின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்த இவ்வாறான விடயங்களில் முழுமையான வெளிப்படைத்தன்மை அவசியம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

## வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மனித உடலுக்கு உணரப்படும் வெப்பம்

### உலக வானிலையியல் அமைப்பு விடுத்துள்ள அபாய எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 27

வடக்கு, வடமத்திய, வடமேல், மேல், சப்ரகமுவ, தெற்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் மொனராகலை மாவட்டத்திலும் மனித உடலுக்கு உணரப்படும் வெப்பச் சுட்டெண் அவதானிக்கப்பட வேண்டிய மட்டத்தில் நிலவும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

இதேவேளை, 2026 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து உலகளாவிய வெப்பநிலை மற்றும் மழைவீழ்ச்சி கோலங்களில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய எல் நினோ நிலைமை வளர்ச்சியடையக் கூடும் என்று உலக வானிலையியல் அமைப்பு தெரிவித்துள்ளது.

மே மற்றும் ஜூன் மாதங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் இந்த நிலைமை உருவாவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும், கடல் மேற்பரப்பு வெப்பநிலை வேகமாக அதிகரித்து வருவதே இதற்கு முக்கிய காரணம் என்றும் அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

மத்திய பசுபிக் சமுத்திரத்தின் கடல் மேற்பரப்பு வெப்பநிலை இயல்பை விட அதிகரிப்பதையே எல் நினோ என்று அழைக்கிறோம். இது உலகெங்கிலும் உள்ள பில்லியன் கணக்கான மக்களின் வாழ்வாதாரத்தையும் வானிலையையும் பாதிக்கக்கூடிய ஒரு இயற்கை காலநிலை மாற்றமாகும். மே மற்றும் ஜூன் மாதங்களில் ஆரம்பிக்கக்கூடிய இந்த நிலைமை, அதற்கு அடுத்தடுத்த மாதங்களில் மேலும் தீவிரமடையக்கூடும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது.

உலக வானிலையியல் அமைப்பு கடந்த பெப்ரவரி மாதம் வெளியிட்ட அறிக்கையில், மார்ச் முதல் மே வரையிலான காலப்பகுதியில் எல் நினோ உருவாவதற்கான வாய்ப்பு 10 சதவீதம் மட்டுமே இருப்பதாக குறிப்பிட்டிருந்தது. எனினும், தற்போதைய நிலைமைகளை கருத்தில் கொண்டு மே மாத இறுதியில் இது குறித்த புதிய உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிட அந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது.(எ)

## உங்கள் பிரார்த்தனைகள் எனக்கு தைரியம் அளித்தன

### ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார்


கொழும்பு, ஏப். 27

தாம் சுகவீனமடைந்திருந்தபோது தமது நலனுக்காக பிரார்த்தனை செய்த அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளார்.

எனது உடல்நிலை குறித்து அறியவந்ததும், நலம் விசாரித்தும் நான் விரைவாகக் குணமடைய பிரார்த்தித்தும் கிடைக்கப்பெற்ற தொலைபேசி அழைப்புகள் மற்றும் செய்திகளின் எண்ணிக்கை அளவிடற்கரியது. நான் ஆரோக்கியமாக மீண்டுவர வேண்டும் என நாடு முழுவதும் சர்வமத வழிபாடுகளை முன்னெடுக்க நீங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் வியப்புக்குரியவையாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

நீங்கள் மேற்கொண்ட இச்செயற்பாடுகள், நான் விரைவாகக் குணமடைவதற்கு பெரும் தைரியத்தை அளித்துள்ளன. குறிப்பாக, ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் எனக்காக தங்களால் இயன்ற முயற்சிகளை எடுத்ததற்கு பாராட்டி அதற்காக எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன் என குறித்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். பிள்ளைகளின் உத்தியோகம் உயர் கல்வி பற்றி யோசிப்பீர்கள். அவசிய செலவுகளை கட்டுப்படுத்துவீர்கள். கனவு நனவாகும் நாள்.

**இடபம்**
பழைய பிரச்னைகளுக்கு சுமூக தீர்வு காணபீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். எதிர்பாராத செலவுகள் வந்தாலும் எதிர் பார்த்த பணம் வந்து சமாளிப்பீர்கள்.

**மிதுனம்**
கம்பீரமாக பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். உடன்பிறந்தவர்களால் பயனடைவீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. வாகனத்தை சீர் செய்வீர்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

**கடகம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்- மனைவிக்குள் இருந்து வந்த பிரச்னைகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். புது அத்தியோயம் தொடங்கும் நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஓய்வின்றி உழைக்க வேண்டி இருக்கும். மன இறுக்கங்கள் உருவாகும். அதிக வேலைச்சுமையால் அவ்வப் போது கோபப்படுவீர்கள்.

**கன்னி**
எளிதாக முடிய வேண்டிய விஷயங்கள் கூட பல முறை போராடி முடிப்பீர்கள். பிள்ளைகளின் உணர்வுகளை புரிந்து கொள்ளுங்கள். வாகனம் அடிக்கடி தொந்தரவு தரும்.

**துலாம்**
கோபத்தை கட்டுப்படுத்தி வாழ்வில் உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். உறவினர் நண்பர்களால் அனுகூலம் உண்டு. வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். மதிப்புக் கூடும் நாள்.

**விருட்சிகம்**
எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள். சாதிக்கும் நாள்.

**தனுசு**
அலைச்சல் நீங்கும். குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். சில வேலைகளை விட்டுக்கொடுத்து முடிப்பீர்கள். தொழிலில் லாபம் அதிகரிக்கும்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் முக்கிய வேலைகளை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிக்கப் பாருங்கள். பொறுமை தேவைப் படும் நாள்.

**கும்பம்**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். ஆடை ஆபரணங்கள் புதிதாக வாங்குவீர்கள். கல்யாணப் பேச்சுவார்த்தை சாதகமாக முடிவடையும்.

**மீனம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும்.

# புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணத்தில் ரூ. 60 இலட்சம் மோசடி

## செட்டிக்குளம் பிரதேச செயலகத்தில் தீவிர விசாரணை

வவுனியா, ஏப். 27

டித்வா புயல் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவு வழங்கல் உள்ளிட்ட நிவாரணங்களில் 60 இலட்சம் ரூபாய்க்கு மேல் மோசடி இடம்பெற்றமை குறித்து தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய அரசாங்க அதிபர் பீ. ஏ. சரத்சந்திரவின் உத்தரவுக்கமைய விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

குறித்த விசாரணைகளின் போது டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவு வழங்கல் உள்ளிட்ட பல்வேறு நிவாரண நடவடிக்கைகளில் மோசடி இடம்பெற்றமை தெரியவந்துள்ளது. இதனையடுத்து செட்டிக்குளம் பிரதேச செயலக கிராம அலுவலர்களின் தலைமை அதிகாரி உட்பட 04 உத்தியோகத்தர்கள் உடனடியாக வவுனியா மாவட்ட செயலகத்துக்கு இணைப்பு செய்யப்பட்டதுடன், 8 இற்கும் மேற்பட்ட கிராம அலுவலர்களிடமும் இது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், குறித்த மோசடியில் ஈடுபட்ட சில கிராம அலுவலர்கள் தமது குற்றத்தை ஏற்றுக் கொண்டு மோசடி செய்த பணத்தை மீள செலுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஊழலை ஒழிப்பதாக கூறி ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் இவ்வாறான மோசடிகள் இடம்பெற்றமை தொடர்பில் வெளிப்படையான- நீதியான விசாரணைகள் இடம்பெற்று மோசடி செய்த உத்தியோகத்தர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதே பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்பார்ப்பாகும். (எ-10)

# கீரிமலையில் விசேட மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், ஏப். 27

யாழ். மருத்துவ சங்கமும், மருத்துவப் பிரதிநிதிகள் சங்கமும் இணைந்து நடத்திய இலவச மருத்துவ முகாம் நேற்று முன்தினம் கீரிமலை கருகம்பனை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்- சேவையின் தேவை கருதி யாழ்ப்பாணம் மருத்துவ சங்கம் மற்றும் மருத்துவப் பிரதிநிதிகள் சங்கமும் இணைந்து நடத்திய இலவச மருத்துவ முகாம் கீரிமலை கருகம்பனை கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மங்கல சுடர்கள் ஏற்றப்பட்டு ஆரம்பமான நிகழ்வில் பொது மருத்துவ நிபுணர்கள், குழந்தைகள், சிறுவர் சத்திர சிகிச்சை நிபுணர்கள், குழந்தை மருத்துவ நிபுணர், மகப்பேறு மற்றும் பெண் நோயியல் நிபுணர், தோல் சிகிச்சை நிபுணர், பொது சத்திர சிகிச்சை நிபுணர் உட்பட்ட பல்வேறு மருத்துவ நிபுணர்களது ஆலோசனைகளும், சிகிச்சைகளும் வழங்கப்பட்டதுடன் இனங்காணப்பட்ட நோயாளர்களுக்கான இலவச மருந்துப் பொருட்கள் வழங்கல், மேலதிக சிகிச்சை தேவைப்படுவோருக்கு அரச மருத்துவமனைகளின் ஊடாக சிகிச்சை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

குறித்த மருத்துவ சேவை முகாமுக்கான மருந்துப் பொருட்கள், குளுக்கோசு பரிசோதனை என்பவை யாழ்ப்பாணம் மருத்துவப் பிரதிநிதிகள் சங்கத்தால் இலவசமாக வழங்கப்பட்டன.

இதில், 100 இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு பயன் பெற்றனர். (எ-03)

# தந்தை செல்வாவின் 49ஆவது நினைவு



வவுனியா, ஏப். 27

வவுனியாவில் தந்தை செல்வநாயகத்தின் 49ஆவது நினைவு தினம் நேற்று வவுனியாவில் அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா மணிக்கூட்டு கோபுர சந்தியில் அமைந்துள்ள அவரது சிலை முன்பாக இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது, அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தும், மலர் தூவியும் அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், அவர் தொடர்பான நினைவு பேருரைகளும் நடைபெற்றன.

வவுனியா தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் தலைவர் கருணாநிதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சி முக்கியஸ்தர்கள், பொது அமைப்பினர், பொதுமக்கள் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# ரயில் விபத்து: ஓட்டோ சாரதியும் உயிரிழப்பு

வவுனியா, ஏப். 27

வவுனியா - தாண்டிக்குளம் பகுதியில் கடந்த 23ஆம் திகதி இடம்பெற்ற ரயில் விபத்தில் காயமடைந்து தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த ஓட்டோ சாரதியும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை உயிரிழந்தார்.

தாண்டிக்குளம் ரயில் நிலையத்துக்கு அண்மித்த பகுதியில் தண்டவாளத்தை கடக்க முயன்ற ஓட்டோ மோதி விபத்து.

விபத்தின் போது ஓட்டோவில் பயணித்த பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இதனைத் தொடர்ந்து, விபத்தில் காயமடைந்த ஓட்டோ சாரதி வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

இந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (எ)

*யாழ்ப்பாணத்தில் நீண்ட காலம்*

# போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டவர் ஹெரோயினுடன் கைது

யாழ்ப்பாணம், ஏப். 27

யாழ்ப்பாணத்தில் நீண்ட காலம் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த 31 வயது சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

குருநகர் பகுதியில் வைத்து இவர் கைது செய்யப்படும் போது 2 கிராம் 35 மில்லி கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த சந்தேகநபரிடம் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுகள் பாரிய மோசடிகளாக தெரியவில்லை

## பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 27

தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சர்கள் மீதான சொத்துக் குற்றச்சாட்டுக்களும் பாரிய மோசடிகளாகத் தெரியவில்லை. ஜனாதிபதித் தேர்தல் குறித்து கனவு காண்பவர்களுக்கு மக்கள் உரிய பதிலை வழங்குவார்கள் என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

"நாட்டின் எதிர்காலத்துக்காக ஒருமித்துச் செயல்படக்கூடிய, ஊழலற்ற- அறிவுசார்ந்த மற்றும் நேர்மையான ஒரு குழுவினர் எம்முடன் இணைந்துள்ளனர். இவர்கள் முன்னொரு போதும் அரசியலில் ஈடுபட்டவர்கள் அல்ல.

நான் கடந்த 15 ஆண்டுகளாக அரசியலில் ஈடுபட்டவன் என்ற ரீதியில், தற்போது எதிர்க்கட்சியில் உள்ள பிரதான கட்சிகளுடன் இணைந்து செயல்பட்டபோது எங்குமே நாட்டுப் பற்றுமிக்க, ஒழுக்கமான அரசியல் கலாசாரத்தைக் காணவில்லை. இதனாலேயே நான் அந்த அரசியலில் இருந்து ஒதுங்கினேன்.

தற்போதைய அரசாங்கம் மக்களின் ஆசீர்வாதத்துடனேயே ஆட்சிக்கு வந்துள்ளது. அவர்கள் ஊழல் மற்றும் மோசடிகளுக்கு எதிராகச் செயல்படுவதால் அவர்களுக்கு எமது ஆசி உண்டு. ஆனால், நாட்டில் தற்போது பலமான மாற்று எதிர்க்கட்சி ஒன்று இல்லை.

தற்போதுள்ள எதிர்க்கட்சிகள் ஊழல் நிறைந்தவை. எனவே, நாட்டு மக்களுக்குத் தேவையான ஒரு தூய்மையான மாற்று எதிர்க்கட்சியை உருவாக்குவதே எமது தற்போதைய நோக்கமாகும்.

எதிர்காலத்தில் மக்கள் தற்போதைய ஆட்சிக்கு மாற்றாக ஒரு தரப்பைத் தேடும் போது, தகுதியானவர்களுடன் இணைந்து மக்களின் பக்கம் நிற்க நாம்



தயாராக இருக்கின் றோம்.

தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சர்கள் மீது முன்வைக்கப்படும் நிதி மோசடி குற்றச்சாட்டுக்கள் மற்றும் 250 மில்லியன் டொலர் விவகாரம் தொடர்பில் அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும்.

ஏதேனும் ஒரு பலவீனத்தால் அத்தகைய தவறு நடந்திருந்தால், அது குறித்து அரசாங்கம் முறையான விசாரணைகளை முன்னெடுப்பதே சிறந்தது. தற்போதைய அரசாங்கம் அத்தகைய விசாரணைகளைச் செய்யும் என நாம் நம்புகிறோம்"- என்றார். (எ)

# வெசாக் தான நிகழ்வுகள் பதிவு செய்யப்படவேண்டும்

## பொதுச் சுகாதார பரிசோதகர்கள்

கொழும்பு, ஏப். 27

நாடளாவிய ரீதியில் வெசாக் பண்டிகைக்கான முன்னேற்பாடுகள் ஆரம்பமாகியுள்ள நிலையில், வெசாக் தானம் "வெசாக் தன்சல்" ஏற்பாட்டாளர்களின் நிகழ்வுகள் முறையாகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் கட்டாயமானது என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

மேலும் குறித்த நிகழ்வுகளின் போது சுகாதார வழிகாட்டல்கள் கண்டிப்பாகப் பின்பற்றப்பட வேண்டும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

தான ஏற்பாட்டாளர்கள், நிகழ்வு நடைபெறும் இடம் மற்றும் வழங்கப்படும் உணவின் தன்மை குறித்த விவரங்களை தமது பகுதியில் உள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்குத் தகவல் வழங்கி பதிவுகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதற்கான பணிகள் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், தன்சல் நடைபெறுவதற்கு முன்னதாக, அந்த இடம் உணவு சமைப்பதற்குப் பொருத்தமானதா? கழிவு அகற்றல் வசதிகள் எவ்வாறு உள்ளன? மற்றும் நீரின் தரம் மற்றும் சமையல் சூழல் தூய்மையாக இருக்கின்றதா? போன்ற விடயங்கள் உறுதிப்படுத்தப்படுவதற்காக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் நேரில் சென்று ஆய்வுநடத்தப்படும்.

உணவு தயாரிப்பில் ஈடுபடுபவர்கள் மற்றும் அதனை விநியோகிப்பவர்கள் சுகாதாரமான முறையில் செயல்படுகிறார்களா என்பது குறித்தும் சோதனைகள் நடத்தப்படும்என்று தெரிவித்தனர்.

அத்துடன், பாதுகாப்பான மற்றும் தரமான பொருட்களை மட்டுமே பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

முறையாகப் பதிவு செய்யப்படாத அல்லது சுகாதாரமற்ற முறையில் நடத்தப்படும் தன்சல்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் கே.பி. போரலெஸ்ஸ எச்சரிக்கை விடுத்துள்ளார். (எ)

*2. 5 கோடி ரூபாய் பெறுமதியான*

# குஷ் போதைப்பொருளுடன் புகைப்பட கலைஞர் கைது

கொழும்பு, ஏப். 267

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக சுமார் 2 கோடியே 50 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறு மதியான குஷ் ரக போதைப் பொருளை நாட்டுக்குள் கொண்டுவந்த ஒருவர் சனிக்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டார்.

இவர் கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக வெளியேற முயன்ற போது, சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் கொழும்பு பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய புகைப்படக் கலைஞர் என அடையாளம் காணப்பட்டார்.

இவர் நேற்று அதிகாலை 01:25 மணியளவில் பாங்கொக் நகரிலிருந்து தாய் ஏயார் ஏசியா நிறுவனத்துக்குச் சொந்தமான விமானம் மூலம் கட்டுநாயக் கவை வந்தடைந்தார்.

தனது பயணப் பொதியினுள் இருந்த உலர்ந்த பழங்கள் அடங்கிய பைக்கற்றுக்களை அகற்றிவிட்டு, அதற்குள் மிக சூட்சுமமான முறையில் போதைப்பொருளை மறைத்து வைத்துள்ளார்.

இதன்போது 02 கிலோகிராம் 505 கிராம் எடையுள்ள குஷ் ரக போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரையும், பறிமுதல் செய் யப்பட்ட போதைப்பொருள் தொகுதியையும் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்க சுங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். (எ)

# போலி ஆவணங்களை பயன்படுத்தி நிதி மோசடி - சந்தேகநபர் கைது

கொழும்பு, ஏப். 27

போலி அடையாள அட்டை மற்றும் போலி சாரதி அனுமதிப்பத்திரத்தை பயன்படுத்தி நிதி மோசடிகளில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.

நேற்று முன்தினம் இரவு, யக்கல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெலும்மஹர பகுதியில் கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது இந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டவர் கம்பஹா பகுதியைச் சேர்ந்த 60 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை பெற்றுத் தருவதாகக் கூறி பண மோசடி செய்தமை தொடர்பில், மாரவில நீதிவான் நீதிமன்றத்தினால் இவருக்கு எதிராக திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தமை பொலிஸாரின் மேலதிக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் தொடர்பான மேலதிக விசாரணைகளை யக்கல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

2. 5 மில்லியன் டொலர்

# நிதி மாயமான சம்பவம் திட்டமிட்ட கொள்ளையே

பதுளை, ஏப். 27

அவுஸ்திரேலியாவுக்கு செலுத்த வேண்டிய 2.5 மில்லியன் டொலர் நிதி மாயமான சம்பவம் தற்செயலாக நடந்த ஒன்றல்ல, அது அரசாங்கத்தால் திட்டமிட்டு நடத்தப்பட்ட ஒரு கொள்ளை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளார்.

இந்த மோசடி குறித்து குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்ய அரசாங்கம் அச்சப்படுவது ஏன் எனவும், நிதி இழப்பு குறித்த உண்மைகளை பல மாதங்களாக மறைத்து வைத்திருப்பது ஆட்சியாளர்களின் தொடர்பையே உறுதிப்படுத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

பதுளையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

இந்த நிதி மோசடிச் சம்பவம் தற்செயலாக நடந்த ஒன்றல்ல, மாறாக அரசாங்கமே திட்டமிட்டு நடத்திய ஒரு திருட்டு சம்பவமாகும். 2.5 மில்லியன் டொலர் மாயமான விவகாரம் பொதுவெளியில் கசியும் வரை அரசாங்கம் அதனை மூடி மறைத்திருந்தது ஏன்? இந்தச் சம்பவம் கடந்த டிசெம்பர் மாதமே நடந்திருந்தாலும், ஏப்ரல் மாதம் எதிர்க்கட்சிகள் இதனை வெளிச்சத்துக்குக் கொண்டுவரும் வரை அரசாங்கம் மௌனம் காத்தமை, இதில் அரசாங்கத்தின் உயர்மட்டப் புள்ளிகளுக்குத் தொடர்பு இருப்பதையே உறுதிப்படுத்துகிறது.

வழமையாக ஒரு இணைய வழித் தாக்குதல் அல்லது நிதி மோசடி இடம்பெற்றால், அதனை உடனடியாக நாட்டுக்கு அறிவிப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும். ஆனால், இந்த அரசாங்கம் பல மாதங்களாக அதனை இரகசியமாக வைத்திருந்தது. திருடப்பட்ட பணம் தற்போதைய ஆட்சியாளர்களின் சர்வதேச வங்கிக் கணக்குகளுக்குச் சென்றிருக்கலாம். அவர்கள் தமது தனிப்பட்ட மற்றும் கட்சி நலன்களுக்காகவே இந்தப் பணத்தைப் பயன்படுத்தியுள்ளனர்.

மேலும், நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் திறைசேரியின் அதிகாரிகள் இந்த மோசடிக்குச் சர்வதேச ஹெக்கர்களைக் கைகாட்டித் தப்பிக்க முயல்கின்றனர். முன்பும் இவ் வாறான சம்பவங்கள் நடந்துள்ளன என்று அதிகாரிகள் கூறுவது, தற்போதைய திருட்டை நியாயப்படுத்துவதற்காகச் சொல்லப்படும் ஒரு சாக்குப் போக்காகும். மோசடி நடந்தவுடன் அது குறித்து குற்றப்பு லனாய்வுத் திணைக்களத்திலோ அல்லது பொலிஸாரிடமோ முறைப்பாடு செய்ய அரசாங்கம் இது வரை முன்வரவில்லை என்பது திருடனே திருட்டைப் பற்றித் தேட விரும்பவில்லை என்ற நிலையையே காட்டுகிறது.

மக்களுக்குப் புரியும்படி சொல்வதானால், பிச்சை எடுப்பவர்களைப் போல நடித்து, எங்களுக்கு சம்பளம் வேண்டாம், உடுத்த ஆடை இல்லை" என்று கூறி ஆட்சியைப் பிடித்தவர்கள், இன்று மாளிகைகளை அமைத்துக்கொண்டு ஆடம்பர வாழ்க்கை வாழ்கின்றனர். மக்களின் வரிப் பணத்தைத் திருடித் தமது பைகளை நிரப்புவதற்காகவே இவர்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தியுள்ளனர்.

இந்த 2.5 மில்லியன் டொலர் இழப்பிற்கு நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனா திபதி, மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அனை வரும் பொறுப்புக்கூற வேண் டும். இந்த மோசடி தொடர் பாக உரிய விசாரணை நடத்தப் படாவிட்டால் அவர்கள் அனை வரும் வரலாற்றில் மோசடிக்கா ரர்களாகவே அடையாளப்ப டுத்தப்படுவார்கள் என்று எச்சரிக்கின்றோம்- என்றார். (எ)

## இன்டர்போல் சர்வதேச மாநாட்டில் பொலிஸ் ஊடக பேச்சாளர் பங்கேற்பு


கொழும்பு, ஏப். 27

பிரான்ஸ் நாட்டின் லியோன் நகரில் நடைபெறவுள்ள இன்டர்போல் அமைப்பின் முதலாவது சர்வதேச பொதுத் தகவல் தொடர்பு மாநாட்டில் பங்கேற்குமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், உதவி பொலிஸ் அத்தியட்சகருமான எவ். யூ. வூட்லருக்கு உத்தியோகபூர்வ அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச தரம் வாய்ந்த இந்த மாநாடு நாளை 28ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை பிரான்ஸின் லியோன் நகரில் நடைபெறவுள்ளது. இன்டர் போல் பொதுத் தகவல் தொடர்பு பணிப்பாளர் நாயகத்தினால் இந்த விசேட அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை பொலிஸார் நெருக்கடி காலங்களில் கையாண்ட தகவல் தொடர்பு முறைகள் மற்றும் முகாமைத்துவ திறனை சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கும் ஒரு நிகழ்வாக இது பார்க்கப்படுகிறது.

குறிப்பாக 2025 நவம்பரில் ஏற்பட்ட "டித்வா சூறாவளி"




காலப்பகுதியில் இலங்கை பொலிஸார் மேற்கொண்ட காத்திரமான பங்களிப்பு மற்றும் தகவல் பரிமாற்ற முறைகள் குறித்து இந்த மாநாட்டில் விரிவாக விளக்கமளிக்கப்படவுள்ளது.

அத்துடன் சர்வதேச சட்ட அமுலாக்க ஒத்துழைப்புக்கு வூட்லர் வழங்கி வரும் தொடர்ச்சியான பங்களிப்பும், அவர் காட்டிய ஆளுமையும் இந்த அழைப்புக்கு முக்கிய காரணங்களாக கருதப்படுகின்றன.

உதவி பொலிஸ் அத்தியட்சகர் வூட்லர் பிரான்ஸ் சென்றுள்ள காலப்பகுதியில், பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கடமைகளை கவனிப்பதற்காக பொலிஸ் அத்தியட்சகர் மினுப சேனாரத்ன நியமிக்கப்பட்டுள்ளார். (எ)

## கண்டி மற்றும் நுவரெலியாவில் மழை பெய்யும்

கொழும்பு, ஏப். 27

மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் பிற்பகல் 02.00 மணிக்குப் பின்னர் ஆங்காங்கே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.


நாட்டின் ஏனைய பகுதிக ளில் பிரதானமாக சீரான வானிலை நிலவும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் களுத்துறை மாவட்டங்களிலும் அதிகாலை வேளையில் சில இடங்களில் பனிமூட்டமான நிலை காணப்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பாதிப்புகளைக் குறைத்துக் கொள்ளத் முன்னெச்ச ரிக்கை நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு வளிமண்டல வியல் திணைக்களம் பொதுமக் களைக் கேட்டுக்கொண்டுள்ளது.(எ)

110கோடிரூபாய்க்கும்அதிகபெறுமதியுடைய

## போதைப்பொருட்களுடன் 22 தேரர்கள் அதிரடி கைது



கொழும்பு, ஏப். 27

தாய்லாந்திலிருந்து சுமார் 110 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியுடைய குஷ் மற்றும் ஹேஷ் ரக போதைப்பொருட்களை கடத்தி வந்த 22 தேரர்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 10.10 மணியளவில் தாய்லாந்தின் பாங்கொக் நகரிலிருந்து தாய் எயார் ஏசியா விமானம் மூலம் வருகை தந்த தேரர்களை அதிகாரிகள் சோதனையிட்டனர். இதன்போது, அவர்கள் கொண்டு வந்த பயணப் பொதிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போதைப்பொருள் தொகை கண்டுபிடிக்கப்பட்டது.

ஒவ்வொரு தேரரின் பயணப் பொதியிலும் பாடசாலை உபகரணங்கள் மற்றும் இனிப்புப் பண்டங்களுக்கு நடுவே, சூட்சுமமான முறையில் போதைப் பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது.

மொத்தமாக 110 கிலோ கிராமுக்கும் அதிக எடையுடைய போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதுடன், அதன் சந்தை பெறுமதி சுமார் 110 கோடி ரூபாய்க்கும் அதிகம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு தேரரும் சுமார் 5 கிலோ கிராம் போதைப்பொருளை தனித்தனியாகக் கொண்டு வந்துள்ளனர்.

இவர்கள் இலங்கையின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த இளம் தேரர்கள் எனவும், உயர் கல்வி நிறுவனங்களில் கல்வி பயின்று வருபவர்கள் எனவும் அடையாளம்காணப்பட்டுள்ளனர்.

கடந்த ஏப்ரல் 22ஆம் திகதி தர்மகர்த்தா ஒருவரால் வழங்கப்பட்ட விமான பயணச் சீட்டுகள் மூலம் இவர்கள் தாய்லாந்து சென்றுள்ளனர். தாய்லாந்தில் தங்கியிருந்த போது இவர்கள் சாதாரண உடையில் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த படங்கள் மற்றும் வீடியோக்கள் அவர்களின் தொலைபேசிகளிலிருந்து கண்டறியப்பட்டுள்ளன.

கட்டுநாயக்க விமான நிலைய வரலாற்றில் இவ்வாறான பாரிய போதைப்பொருள் தொகை சிக்கிய முதல் சந்தர்ப்பம் இதுவெனக் கூறப்படுகிறது. அத்துடன், பெருமளவிலான தேரர்கள் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டதும் இதுவே முதல் முறையாகும். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைக்காக நீர்கொழும்பு நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (எ)

ஐஸ் போதைப்பொருள் மற்றும்

## போலி நாணயத்தாள்களுடன் ஆறு சந்தேகநபர்கள் கைது!

ஸ்ரீகொழும்பு, ஏப். 27

இரத்மலானை மற்றும் இம்புல்கொட ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் போது, 91 கிராம் 200 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள் மற்றும் போலி நாண யத்தாள்களுடன் ஆறு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கல்கிஸை கோட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது. இதன்போது, சந்தேகநபர்களிடமிருந்து போலி 5000 ரூபாய் போலி நாண யத்தாள்கள் இரண்டும், 2000 ரூபாய் போலி நாணயத்தாள்கள் 21இம் பறிமுதல் செய்யப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்கள் 25, 29, 30, 32, 35 மற்றும் 52 வயதுடையவர்கள் எனவும், இவர்கள் இம்புல்கொட, தெஹிபிட்டிய, பெலெந்த மற்றும் இரத்மலானை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## கோழிப்பண்ணை உரிமையாளரிடம் இலஞ்சம் பெற்றவருக்கு 6 ஆண்டு சிறை

கொழும்பு, ஏப். 27

கோழிப்பண்ணை உரிமையாளர் ஒருவரிடம் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் குற்றவாளியாகக் காணப்பட்ட அதிகாரி ஒருவருக்கு 6 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. கடந்த 2009 ஆம் ஆண்டு, மொனராகலை மாவட்டம் வெல்லவாய பகுதியில் உள்ள கோழிப்பண்ணை உரிமையாளர் ஒருவரிடம், இந்த அதிகாரி சட்ட விவகாரங்களைச் சாதகமாக முடித்துக் தருவதாக கூறி 15,000 ரூபாய் இலஞ்சமாக கோரியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் 2009 செப்ரெம்பர் 02 ஆம் திகதி இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு முறைப்பாடொன்று அளிக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கு தொடர்பான நீண்டகால விசாரணைகளின் பின்னர், கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பை அறிவித்தது. இலஞ்சம் கோரியமை மற்றும் பெற்றுக்கொண்டமை தொடர்பான மூன்று குற்றச்சாட்டுக்களில் சந்தேகநபர் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டார்.

ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் தலா 6 ஆண்டுகள் வீதம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இந்தத் தண்டனைகளை ஒரே நேரத்தில் அனுபவிக்க வேண்டும் எனவும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் தலா 5,000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதுடன், இலஞ்சமாகப் பெறப்பட்ட 15,000 ரூபாய்க்கு இணையான மேலதிக அபராதத்தையும் செலுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

## ரஷ்யாவிடமிருந்து...

ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வகையில் உயர்மட்ட விஜயங்கள் திட்டமிடப்பட்டுள்ளன.

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை உயர்வு மற்றும் கப்பல்களுக்கான காப்புறுதிக் கட்டணங்கள் அதிகரித்துள்ளதால், இலங்கை தற்போது அதிக விலை கொடுத்து எரிபொருளைக் கொள்வனவு செய்து வருகிறது.

ரஷ்யாவுடனான இந்த நேரடி ஒப்பந்தம் நாட்டின் அந்நியச் செலாவணிச் சுமையைக் குறைக்கவும், எரிசக்தி பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னர் பலமுறை இது குறித்து ஆலோசிக்கப்பட்ட போதிலும், நேரக் குறைபாடுகள் காரணமாக நிறைவேற்ற முடியாமல் போன இந்தத் திட்டத்தை, தற்போதுள்ள அமெரிக்காவின் சலுகைக் காலத்திற்குள் முடிக்க அரசாங்கம் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது.

இதேவேளை இரண்டு நாடுகளுக்கும் இடையில் உயர்மட்ட சந்திப்புக்களும் திட்டமிடப்பட்டுள்ளன.இதன்படி, 2026 மே 4 அன்று ரஷ்ய சுகாதார அமைச்சர் இலங்கைக்கு விஜயம் செய்வார்.இதனையடுத்து மே நடுப் பகுதியில் இலங்கை சுகாதார அமைச்சர் ரஷ்யாவுக்கு விஜயம் செய்யவுள்ளார். (அ)

## தையிட்டி காணிகளின்...

நீண்ட காலமாகப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இது குறித்துக் கவனம் செலுத்திய அமைச்சர் இ.சந்திரசேகர் மற்றும் யாழ். மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபன் ஆகியோர், விகாரையைச் சூழவுள்ள பொதுமக்களின் நிலத்தை விடுவிப்பதற்கு ஏதுவாக நில அளவீடுகளை மேற்கொள்ளப் போவதாக உரிமையாளர்களிடம் உறுதியளித்திருந்தனர்.

இதற்கு முன்னதாக இக்காணிகளை அளவீடு செய்ய முயற்சித்த போது, அதற்கு விகாராதிபதி கடும் எதிர்ப்புத் தெரிவித்து அனுமதி மறுத்திருந்தார். இதன் காரணமாக நில அளவீட்டுப் பணிகள் இடைநடுவில் கைவிடப்பட்டிருந்தன.

இந்த முறை நில அளவீட்டுப் பணிகளை எவ்விதத் தடையுமின்றி முன்னெடுப்பதற்காக, மாவட்ட நில அளவைத் திணைக்கள உத்தியோகத்தர்களுடன் இணைந்து கொழும்பிலுள்ள நில அளவைத் திணைக்களத்தின் தலைமைப் பணிமனை அதிகாரிகளும் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளனர்.

இரண்டு நாள்களாக இடம்பெறவுள்ள இந்த அளவீட்டுப் பணிகளின் ஊடாக, ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் நிலங்கள் சரியாக அடையாளப்படுத்தப்பட்டு, நில உரிமையாளர்களிடம் கையளிப்பதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

## 50 ஆயிரம்...

பெறாமகளான இரண்டு வயது பெண் குழந்தையை தமது குடும்ப சூழ்நிலை காரணமாக 50 ஆயிரம் ரூபாய் பணத்தைப் பெற்றுக்கொண்டு கையளிப்பதாகவும் , எக்காரணத்திலும் குழந்தையை மீளப் பெறமாட்டோம் என்றும், குழந்தையை வாங்கிய பெண் தான் விரும்பும் பட்சத்தில் குழந்தையை காட்ட விரும்பினால் மாத்திரம் குழந்தையை பார்வையிட முடியும் எனவும் கடிதம் எழுதிக்கொடுத்து விற்பனை செய்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் அறிந்த தர்மபுரம் பொலிஸார், குழந்தையை வாங்கிச் சென்ற பெண்ணை கைது செய்ததுடன், குழந்தையையும் மீட்டனர். அத்துடன் குழந்தையை விற்பனை செய்த குழந்தையின் சிறிய தாய் மற்றும் சிறிய தந்தை ஆகிய இருவரையும் கைது செய்தனர்.

தற்போது மீட்கப்பட்ட குழந்தை பொலிஸ் பராமரிப்பில் உள்ள நிலையில் கைது செய்யப்பட்ட மூவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## மின் கட்டணம்...

வெளியிடப்பட்டுள்ளன.

மத்திய வங்கியின் அறிக்கையின்படி, 2025ஆம் ஆண்டு மின்சார சபையின் நிதி நிலைமை சரிவடைந்தமைக்கு பின்வரும் காரணங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

2024ஆம் ஆண்டில் பலமுறை கட்டணங்கள் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து, 2025 ஜனவரியிலும் மின்சாரக் கட்டணங்கள் சராசரியாக 20 வீதம் குறைக்கப்பட்டன.

2025ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் நிலவிய வறண்ட வானிலை காரணமாக, நீர்மின் உற்பத்தி குறைந்து அனல்மின் உற்பத்தி அதிகரித்தது. இதனால் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான செலவு கணிசமாக உயர்ந்தது.

திரட்டப்பட்ட நட்டத்தை ஈடுகட்ட 2025 ஜூன் மாதம் மின்சாரக் கட்டணங்கள் 15 வீதம் உயர்த்தப்பட்டன. இருப்பினும், மின்சார சபையின் நிதிச் சுமையைக் குறைக்க இந்த உயர்வு போதுமானதாக இருக்கவில்லை என மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

அதிகரித்து வரும் கடன் சுமையினால் மின்சார சபையின் நிதிப் பற்றாக்குறை காரணமாக அதன் கடன் மற்றும் பொறுப்புக்களும் பாரியளவில் அதிகரித்துள்ளன.

2024 இறுதியில் 174.3 பில்லியன் ரூபாயாக இருந்த குறுகிய காலக் கடன், 2025 இறுதியில் 206.2 பில்லியன் ரூபாயாக அதிகரித்துள்ளதுடன், இதே காலப்பகுதியில் நீண்ட காலப் பொறுப்புக்கள் 409 பில்லியனில் இருந்து 411.2 பில்லியன் ரூபாயாக உயர்ந்துள்ளது.

எதிர்கால வருமான முன்னறிவிப்புகள் மற்றும் உற்பத்திச் செலவுகளைக் கருத்திற்கொண்டு, 2026 ஏப்ரல் மாதம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மின்சாரக் கட்டணங்களை மேலும் 10.3 வீதம் உயர்த்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கி தனது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளது.

நிதி நட்டங்களுக்கு மத்தியிலும், 2025ஆம் ஆண்டில் மின்சாரத்திற்கான தேவை 5.8 வீதம் வளர்ச்சியடைந்துள்ளது. குறிப்பாக வீட்டுப் பாவனையாளர்களுக்கான மின் தேவை அதிகரித்துள்ள போதிலும், ஆண்டின் இறுதியில் ஏற்பட்ட "டித்வா" சூறாவளி காரணமாக மின் தேவையில் தற்காலிக வீழ்ச்சி காணப்பட்டதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

## வெள்ளை மாளிகை...

கொண்டிருந்த போது திடீரென துப்பாக்கிச் சூடு சத்தம் கேட்டதால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதனையடுத்து, பாதுகாப்பு அதிகாரிகள் உடனடியாகச் செயல்பட்டு, அங்கிருந்த ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் துப்பாக்கிச் சூடு சத்தம் கேட்டவுடன் பாதுகாப்புப் படையினரால் உடனடியாக வெளியேற்றப்பட்டார்.

பின்னர் அவர் தனது "ட்ரூத் சோஷியல்" தளத்தில், துப்பாக்கிச் சூடு நடத்தியவர் பிடிபட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

நிகழ்ச்சியைத் தொடர்ந்து நடத்தத் தான் விரும்புவதாகவும், இருப்பினும் காவல்துறையின் அறிவுறுத்தலின்படி தாம் செயல்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்.பி. ஐ. பணிப்பாளர் காஷ் படேல் துப்பாக்கிச் சூடு சத்தம் கேட்டவுடன் கீழே குனிந்து மறைந்து கொண்டார்.

பின்னர் பாதுகாப்பு அதிகாரிகள் அவரை அங்கிருந்து பாதுகாப்பாக அழைத்துச் சென்றனர்.

ரொபட் எவ். கென்னடி ஜூனியர் உட்பட்டவர்கள் பாதுகாப்பு அதிகாரிகளால் வெளியேற்றப்பட்டனர்.

கென்னடி ஜூனியர் காலில் காயத்துடன் தத்தித் தத்தி நடப்பது போன்ற காட்சிகள் பதிவாகியுள்ளன. துப்பாக்கிச் சூடு நடத்தியதாகச் சந்தேகிக்கப்படும் நபர் பொலிஸாரின் கட்டுப் பாட்டில் இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தநிலையில் ஹில்டன் விருந்தகத்தின் பிரதான மண்டபத்தில் இன்னும் ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்புக் காரணங்களுக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (அ)

## 2025 இல் வாகன...

ஏற்பட்ட தேக்க நிலை மற்றும் பொருளாதார மீட்சி ஆகிய காரணிகளால், வாகனங்களுக்கான கேள்வி கடந்த ஆண்டு எதிர்பாராத விதமாக அதிகரித்தது.

2025-ஆம் ஆண்டில் வாகன இறக்குமதிக்காக இலங்கை 2.04 பில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிட்டுள்ளது.

குறிப்பாக 2025 ஏப்ரல் மாதத்திற்குப் பிறகு தனியார் மற்றும் வணிக ரீதியான வாகனங்களின் இறக்குமதி கணிசமாக உயர்ந்துள்ளது.

இலங்கை வரலாற்றில் வாகன இறக்குமதிக்காக அதிகளவு செலவிடப்பட்ட ஆண்டுகளில் 2025-ஆம் ஆண்டு மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.

2015: 2.12 பில்லியன் அமெரிக்க டொலர்கள் (முதலிடம்)

2018: 2.09 பில்லியன் அமெரிக்க டொலர்கள் (இரண்டாமிடம்)

2025: 2.04 பில்லியன் அமெரிக்க டொலர்கள் (மூன்றாமிடம்)

வாகன இறக்குமதி திடீரென அதிகரிப்பதைக் கட்டுப்படுத்தவும், அந்நியச் செலாவணி வெளியேற்றத்தை நிர்வகிக்கவும் அரசாங்கம் பல்வேறு வரி மற்றும் வரி அல்லாத கொள்கைகளை அறிமுகப்படுத்தியது. இருப்பினும், நீண்ட காலமாக வாகனங்களை கொள்வனவு செய்யக் காத்திருந்த மக்களின் ஆர்வம் காரணமாக இந்த இறக்குமதி அதிகரிப்பு தவிர்க்க முடியாததாகிவிட்டது. (அ)

## இரு அமைச்சர்களுக்கு...

அமர்வு மே மாதம் 5 ஆம் திகதி ஆர்பிக்கப்பட உள்ள நிலையில், நம்பிக்கையில்லா பிரேரணை குறித்த ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அரச திறைசேரியிலிருந்து 2.5 மில்லியன் டொலர் நிதி, போலியான வெளிநாட்டு வங்கிக் கணக்கு ஒன்றிற்கு மாற்றப்பட்டதாகக் கூறப்படும் பாரிய நிதி முறைகேடு தொடர்பாக நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படவுள்ளது.

இதேவேளை, ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் இடம்பெற்ற காலப்பகுதியில், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் அருண ஜயசேகர, கிழக்கு கட்டளைப் பிரிவின் தளபதியாகக் கடமையாற்றியிருந்தார். எனினும், அத்தாக்குதல்களைத் தடுப்பதற்கு அவர் எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் இவருக்கு எதிராகத் தீர்மானம் கொண்டுவரப்படவுள்ளது.

2.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி திருடப்பட்டமை குறித்து அரசாங்கம் இதுவரை முறையான அறிக்கை எதனையும் வெளியிடவில்லை. நிதி அமைச்சு மற்றும் திறைசேரியின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும ஒரு கருத்தைக் கூறுகிறார், நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த மற்றொரு கருத்தை முன்வைக்கிறார்.

இதனால் மக்கள் உண்மையான தகவலைப் பெற்றுக் கொள்ள முடியாமல் குழப்பமடைந்துள்ளதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சுமத்தியுள்ளது.

இந்த மோசடி குறித்து துல்லியமான மற்றும் உண்மையான தகவல்களைப் பெறுவதற்கு நாட்டு மக்களுக்கு உரிமை உள்ளது. மறுபுறம் 2.5 மில்லியன் டொலர் விவகாரம் ஜனவரி மாதமே கண்டறியப்பட்டதாகவும், பல மாதங்களாக இரகசியமாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதாகவும் நிதி அமைச்சின் செயலாளர் கூறுகிறார்.

அவ்வாறாயின், ஜனவரியில் கண்டறியப்பட்ட பிரச்னைக்கு விசாரணைக் குழுவை அமைப்பதற்கு மார்ச் மாதம் வரை ஏன் தாமதம் ஏற்பட்டது என கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

நாட்டின் நிதி நிலைமை குறித்து முழுப் பொறுப்புடைய பாராளுமன்றத்திற்கு, இந்தத் திருட்டுச் சம்பவம் குறித்த தகவல் வெளியாகும் வரை அது பற்றி அறிவிக்கப்படாமல் இருந்தமை ஒரு பெரும் பிரச்னையாகும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே 2.5 மில்லியன் டொலர் விவகாரம் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் ஆகிய இரண்டையும் மையப்படுத்திய நம்பிக்கையில்லாத் தீர்மானங்களில் அடுத்த வாரம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கையொப்பமிடத் திட்டமிட்டுள்ளனர். இந்த நகர்வு தேசிய அரசியல் களத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## வீதி விபத்துகளால்...

திட்டத்தின் ஊடாக, எதிர்வரும் 2029ஆம் ஆண்டிற்குள் வீதி விபத்து மரணங்களை பாரிய அளவில் குறைப்பதே அரசாங்கத்தின் இலக்காகும்.

சுமார் 53 வீத விபத்துக்களுக்கு சாரதிகளின் நடத்தையே பிரதான காரணமாக அமைகின்றது.

விபத்துக்களுடன் தொடர்புடைய சாரதிகளில் 15 வீதம் முதல் 18 வீதம் வரையானோர் போதைப்பொருள் பாவனையுடன் தொடர்புடையவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

வீதிப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில், சாரதிகளுக்கான மேம்படுத்தப்பட்ட பயிற்சி, தரப்படுத்தப்பட்ட பேருந்து சேவைகள் மற்றும் வாகன இறக்குமதிகளை முறைப்படுத்துதல் போன்ற சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. (அ)

## திறைசேரியின்...

போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

துறைசார் மேற்பார்வைக் குழுக்களை குறைத்து இளைஞர்களை நீக்கியதும், பாராளுமன்றத்தின் பலத்தை குறைத்ததும், அண்மையில் நாடு இழந்த 2.5 மில்லியன் டொலருடன் இணைத்துப் பார்க்க வேண்டும். இது மிகவும் பாரதூரமான விடயமாகும். பிரதமர் தலைமையிலான அரசாங்கத்துக்கு இது பெரிய பிரச்னையாக தெரியாவிட்டாலும், இந்த இழப்பை சரி செய்ய வரிச் சுமையை அதிகரிக்க வேண்டி வரும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தினந்தோறும் கடன் திருப்பிச் செலுத்த வேண்டிய நமது நாட்டில் இவை குறைபாடின்றி நடைபெற வேண்டும். திறைசேரி கடன் செலுத்துவதற்கு பல நடவடிக்கைகள் காணப்படுகின்றன. மக்கள் இவற்றை ஆராய வேண்டும். இவற்றை முன்கூட்டியே கணித்து தவிர்க்க முடிந்தாலும் இயலாமை மற்றும் அலட்சியம் காரணமாக இது நடந்துவிட்டது. இதில் மோசடியான நடவடிக்கை நடந்திருக்கலாம் என்று சந்தேகிக்கிறோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இத்தகைய சம்பவம் நடந்தபின் திறைசேரி செயலாளர் இராஜினாமா செய்து வெளிப்படைத்தன்மையான விசாரணை நடத்த வேண்டும். பாராளுமன்ற நிதி பற்றிய குழுவில் திறைசேரியின் செயலாளர் மற்றும் மத்திய வங்கியின் ஆளுநரை அழைத்து விசாரிக்க வேண்டும். இதில் பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றப்பட்டனவா என்று ஆராய வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

கடன் தவணை செலுத்தாததால் கடன் தவறல் ஏற்பட்டுள்ளது. இது குறித்தும் அரசாங்கம் நாட்டுக்கு விளக்கமளிக்க வேண்டும். நிதி அமைச்சர் மற்றும் செயலாளர் இவற்றை நாட்டிற்கு தெளிவுபடுத்த வேண்டும். இனியாவது இத்தகைய சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க பாதுகாப்பான நடைமுறைகளை இப்போது முதலே பின்பற்ற வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். (அ)

## நாட்டை வளர்ச்சி...

ஈடுபாடுகள் குறித்த தேவையற்ற அச்சமே இதற்குக் காரணமாகும். திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் இலங்கையை பிராந்திய எரிசக்தி மையமாக மாற்றுவது நீண்டகாலமாகத் தங்கியுள்ள ஒரு மூலோபாயத் தேவையாகும்.

இலங்கையின் வடமேற்கில் உள்ள 15,000 மெகாவாட் காற்றாலை மின்சக்தி ஆற்றலைப் பயன்படுத்தி, இந்தியாவிற்கு மின்சாரத்தை ஏற்றுமதி செய்வது இலங்கையின் பொருளாதாரத்தை மாற்றியமைக்கும்.

1998 ஆம் ஆண்டில் கையெழுத்திடப்பட்ட சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் மற்றும் 2003 ஆம் ஆண்டின் திருகோணமலை எண்ணெய் தாங்கித் திட்டம் போன்றவற்றில் ஏற்பட்ட தாமதங்கள் மற்றும் இரத்துச் செய்யப்பட்ட திட்டங்கள் (சம்பூர் மின் உற்பத்தி நிலையம், மன்னார் காற்றாலைத் திட்டம்) இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக இருந்ததுள்ளது.

கொழும்பு துறைமுகத்தின் 50 வீத வர்த்தகம் இந்தியாவுடன் தொடர்புடையது. இருப்பினும், இந்தியா தனது சொந்த துறைமுகக் கட்டமைப்பை விரிவுபடுத்துவதால், இலங்கை தனது போட்டித்தன்மையை தக்கவைக்க வடக்கு துறைமுக விரிவாக்கம் போன்ற திட்டங்களை விரைவுபடுத்த வேண்டும். அத்துடன், கட்டுநாயக்க விமான நிலையத்தை இந்தியா மற்றும் ஜப்பான் பங்களிப்புடன் நவீனப்படுத்த வேண்டும்.

மேலும். இலங்கையின் சுற்றுலாத்துறையில் இந்தியா தற்போது முதன்மையான இடத்தில் உள்ளது. இலங்கையை இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கு ஒரு "புதிய கோவா" போல மாற்ற முடியும். அதேபோல், டிஜிற்றல் அடையாள அட்டை போன்ற தொழில்நுட்ப ஒத்துழைப்புகள் மூலம் பிராந்திய பொருளாதாரத்துடன் இலங்கை இணைய முடியும்.

இலங்கை சிறிய நாடு என்ற தயக்கத்தைக் கைவிட்டு, நம்பிக்கையுடனும் தெளிவுடனும் இந்தியாவை ஒரு வாய்ப்பாகக் கருத வேண்டும். அதேநேரம், இந்தியா தனது திட்டங்களை விரைவாகச் செயல்படுத்தி, ஒரு பெரிய நாடு என்ற வகையில் இலங்கையின் தேவைகளுக்கு அதிக உணர்திறனுடன் செயல்பட வேண்டும். அச்சங்களைக் கடந்து செயற்பட்டால் மட்டுமே இலங்கை தெற்காசியாவின் சிங்கப்பூராகவோ அல்லது நெதர்லாந்தாகவோ மாற முடியும்- என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# அரசால் நிர்வாகத்தை சரியாக முன்னெடுக்க முடியாத நிலை!

## நளின் பண்டார குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப். 27

இந்த 2.5 மில்லியன் டொலர் கொள்ளை நடந்து இப்போது பல மாதங்கள் ஆகிவிட்டன. அவ்வாறாயின், இந்தத் தகவலை ஏன் இவ்வளவு காலம் மறைத்து வைத்திருக்கிறார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்-

திறைசேரியில் 2.5 மில்லியன் டொலர் முறைகேடு தொடர்பாக ஒரு பெரிய சந்தேகம் எழுந்துள்ளது. இது ஒரு சைபர் தாக்குதலா அல்லது திட்டமிடப்பட்ட கொள்ளையா என்பது குறித்து எங்களுக்குப் பலமான சந்தேகம் இருக்கிறது. ஹர்ஷன சூரியபெரும என்பவரை பாராளுமன்றத்திலிருந்து நீக்கிவிட்டு, அவரை திறைசேரியின் செயலாளராகவும், அமைச்சின் செயலாளராகவும் நியமித்துள்ளார். அமைச்சின் செயலாளர் பதவிக்கு நியமித்தமை சந்தேகத்திற்குரியது. அவரை ஏன் நியமித்தார்கள்? இதற்கு ஜனாதிபதி நேரடியாகப் பொறுப்பு கூற வேண்டும்.

நமது நாட்டில் திறைசேரியின் செயலாளர் பதவிக்கோ அல்லது அமைச்சின் செயலாளர் பதவிக்கோ தகுதியான பல அதிகாரிகள் நிதி அமைச்சு மற்றும் மத்திய வங்கி போன்றவற்றில் இருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது, ஏன் ஹர்ஷன சூரியபெருமவையே அந்தப் பதவிக்கு நியமிக்க வேண்டும்?

இந்த 2.5 மில்லியன் டொலர் கொள்ளை நடந்து இப்போது பல மாதங்கள் ஆகிவிட்டன. அவ்வாறாயின், இந்தத் தகவலை ஏன் இவ்வளவு காலம் மறைத்து வைத்திருக்கிறார்கள்? இந்த விடயத்தை வெளிப்படுத்தாமல் இருப்பது, அந்தக் கொள்ளைச் சம்பவத்திற்கு துணை போவதாகவே நாங்கள் கருதுகிறோம். இந்தக் கொள்ளையர்களே இதனை வெளியே வராமல் தடுத்திருப்பார்கள் என்ற சந்தேகம் எங்களுக்கு இருக்கிறது. ஒரு நிதி ஒழுக்கத்துடன் செயல்படுவதாகத் தெரியவில்லை. நான் இதைச் சொல்வதற்கு காரணம், எங்களுக்குக் கிடைத்த செய்தியின்படி, வீதி அபிவிருத்தி அதிகாரசபை கணக்கிலிருந்து, சுமார் 380 மில்லியன் ரூபாய் தவறான முறையில் ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த அரசாங்கம் வந்த பிறகு, இந்த அனைத்துப் பணப் பரிமாற்றங்களும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைமையகத்திலிருந்து நேரடி பரிமாற்றமாக மாற்றப்பட்டது. 2023 ஆம் ஆண்டில் ஒப்பந்தக்காரர்களுக்குச் செலுத்தப்பட்ட அதே தொகை, மீண்டும் அதே ஒப்பந்தக்காரர்களுக்குத் தவறாகச் செலுத்தப்பட்டுள்ளது. இப்போது ஒப்பந்தக்காரர்களுக்குக் கடிதம் அனுப்புகிறார்கள் தயவுசெய்து இந்தப் பணத்தை மீண்டும் தாருங்கள் என்று. சில ஒப்பந்தக்காரர்களின் வங்கிக் கடன்கள் நீண்ட காலமாக நிலுவையில் இருந்ததால், அவர்களுக்குப் பணம் வந்தவுடன் வங்கிகள் அந்தக் கடனுக்காகப் பணத்தை எடுத்துக் கொண்டன. எனவே, 380 மில்லியன் ரூபாய் தவறான முறையில் மீண்டும் ஒப்பந்தக்காரர்களுக்குச் சென்றுள்ளது. மூன்று வருடங்களுக்குப் பிறகு பணத்தைப் பார்த்த ஒப்பந்தக்காரர்களும் இது எங்கிருந்து வந்தது என்று யோசிக்கும்போதுதான், இது வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதான அலுவலகத்திலிருந்து தவறாக அனுப்பப்பட்டது என்று தெரியவந்துள்ளது.

இந்த அரசாங்கத்தால் நிர்வாகத்தைச் சரியாகச் செய்ய முடியவில்லை என்பது இதிலிருந்து தெளிவாகிறது-என்றார். (அ)

## போதைப்பொருட்களுடன் யாழ்.நகரில் 13 பேர் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 27

யாழ். நகரில் கடந்த 48 மணித்தியாலங்களில் 13 பேர் போதைப்பொருள்களுடன் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் தலைமையக போதைப்பொருள் தடுப்பு பொலிஸார் நடத்திய சோதனை நடவடிக்கைகளின் போது இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஹெரோயின், போதை மாத்திரைகள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

கைதானவர்களிடம் நடத்தப்படும் மேலதிக விசாரணைகளுக்கு பின்னர் சந்தேக நபர்களை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

## சாகரிகா ஊழியர்கள் நால்வர் பணி நீக்கம்!

கொழும்பு, ஏப். 27

பெலியத்தையிலிருந்து மருதானை நோக்கிப் பயணித்த "சாகரிகா" ரயிலில் பணியாற்றிய ஊழியர்கள் நால்வரை பணியிடை நீக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த ரயிலில் பணியாற்றிய சாரதி, காப்பாளர், உதவிச் சாரதி மற்றும் உதவி ரயில் காப்பாளர் ஆகியோரே பணியிடை நீக்கம் செய்யப்படவுள்ளார்கள்.

கொம்பனித்தெரு ரயில் நிலையத்துக்கு அருகில் 24ஆம் திகதி தடம் புரண்டிருந்த "சாகரிகா" ரயில் சீர்செய்யப்பட்டு மீண்டும் கொழும்பு நோக்கி சென்றபோது கொம்பனித் தெரு ரயில் நிலையத்துக்கு அருகில் மீண்டும் தடம் புரண்டுள்ளதன் காரணமாகவே பணியிடை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

## நேருக்கு நேர் மோதிய பஸ்கள் 11 பேர் வைத்தியசாலையில்!

கொழும்பு, ஏப். 27

தம்புள்ளை - மாத்தளை பிரதான வீதியின் நாவுல, நாலந்த பகுதியில் நேற்றுக் காலை 9.20 மணியளவில் இரு பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் 11 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த 11 பேரும் நாலந்த பிரதேச வைத்தியசாலை மற்றும் மாத்தளை வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளதோடு, இவர்களுள் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விபத்தை நேரில் கண்ட சபாநாயகர், உடனடியாக செயற்பட்டு காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளார்.

சம்பவம் தொடர்பாகத் தனியார் பஸ் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்ஸின் சாரதி தப்பியோடியுள்ளார். விபத்து குறித்த மேலதிக விசாரணைகளை நாவுல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## அர்ச்சுனா எம்.பியுடன் முரண்பட்ட பெண்ணொருவர் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், ஏப். 27

யாழ்ப்பாணத்தில் அர்ச்சுனா எம்.பியுடன் முரண்பட்ட பெண்ணொருவரை விளக்கமறியலில் வைக்க மல்லாகம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பெரியவிளான் பகுதியில் உள்ள காணி ஒன்று தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினருக்கும், மற்றுமொரு தரப்பினருக்கும் இடையில் காணி பிணக்கு ஒன்று நிலவி வரும் நிலையில், நேற்று முன் தினம் குறித்த காணிக்குள் பாராளுமன்ற உறுப்பினருக்கும் மற்றைய தரப்பினரும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

இந்நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் தனது கைத்துப்பாக்கியை காட்டி அவர்களை மிரட்டியமை தொடர்பிலான காணொளிகள் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகிறது.

இவ்வாறான நிலையில், தனது காணிக்குள் அத்துமீறி நுழைந்து, தன்னை அச்சுறுத்தியதாக பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன், இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், பாராளுமன்ற உறுப்பினருடன் முரண்பட்ட பெண்ணொருவரை கைது செய்து மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தினர்.

அதனை அடுத்து குறித்த பெண்ணை எதிர்வரும் 29ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது.

அதன்போது குறித்த பெண் ஒரு வயது குழந்தைக்கு தாய் எனவும், குழந்தைக்கு பாலூட்டவேண்டிய தேவை உள்ளதாகவும் மன்றுக்கு சுட்டிக்காட்டிய போது, குழந்தையை தாயுடன் இருக்க மன்று அனுமதித்தது. (அ)

## கொள்கலன் விசாரணைக் குழுவின் கால எல்லை 3 மாதங்களுக்கு நீடிப்பு

கொழும்பு, ஏப். 27

கொழும்பு துறைமுகத்திலிருந்து எவ்வித உடல் பரிசோதனைகளுமின்றி 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்கும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் கால எல்லை மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் நெருக்கடி உள்ளிட்ட நாட்டின் தற்போதைய சூழல் காரணமாக இறுதி அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ள நிலையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தெரிவுக்குழுவில் தற்போது ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களிடையே கடும் மோதல் போக்கு உருவாகியுள்ளது.

குறிப்பாக, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, அமைச்சர் பிமல் ரத்நாயக்க மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் உள்ளிட்டோரை சாட்சியமளிக்க அழைக்குமாறு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கை தெரிவுக்குழுவில் வாக்கெடுப்பு மூலம் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சியின் இந்தக் கோரிக்கையானது விசாரணைகளைக் திசைதிருப்பும் முயற்சி என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நஜித் இந்திக்க சாடியுள்ளார்.

சாட்சியாளர்களை அழைப்பதற்கு முறையான ஆதாரங்கள் முன்வைக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, ஆளும் தரப்பினர் தமது பெரும்பான்மையைப் பயன்படுத்தி முக்கியமான சாட்சியாளர்களைத் தடுத்து வருவதாக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா குற்றம் சுமத்தியுள்ளார்.

இது பாராளுமன்ற மரபுகளுக்கு எதிரானது எனவும், இது குறித்து சபாநாயகரிடம் முறையிட அல்லது குழுவிலிருந்து விலக வாய்ப்புள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், பெரும்பாலான சாட்சியங்கள் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், இன்னும் சில வாரங்களில் இறுதி அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்ப [illegible]

## அப்பட்டமாக பொய் கூறும் நிதி அமைச்சின் செயலாளர்

### குற்றம்சாட்டுகிறார் கீர்த்தி தென்னக்கோன்

கொழும்பு, ஏப். 27

திறைசேரியில் மயமான 2.5 மில்லியன் டொலர் பணம் தொடர்பாக நிதி அமைச்சின் செயலாளர் வாய் திறக்கும் போதெல்லாம் அப்பட்டமான பொய்களையே கூறுகிறாரென தென் மாகாண முன்னாள் ஆளுநர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.திறைசேரியில் மயமான 2.5 மில்லியன் டொலர் சம்பவம் தொடர்பில் பிரிலோயர்ஸ் அமைப்பு நேற்று கொழும்பு நிப்போன் ஹோட்டலில் நடைபெற்ற செய்தியாலளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"ஹக்கர்களின் சம்பவத்திற்கு அரசாங்கத்தில் உள்ள எந்த அரசியல்வாதியோ அல்லது அதிகாரியோ பொறுப்பேற்கவில்லை. திறைசேரி கொள்ளை தொடர்பாக இலங்கை மத்திய வங்கி நாட்டிற்குப் பொறுப்புக்கூற வேண்டியது குறித்து பாராளுமன்றத்திற்கு விளக்கப்பட வேண்டும்" என்றும் தென்னக்கோன் குறிப்பிட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.04.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.